## கடுமையான சட்டங்களால் தற்கொலைகளைத் தடுக்க முடியாது!

# ‘நீட்’ தேர்வை முழுமையாக அகற்றுவதே ஒரே தீர்வு!

## மாநிலங்களவையில் கல்வித்துறை மசோதா மீதான விவாதத்தில் மாநிலங்களவை கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா வலியுறுத்தல்!

**புதுடெல்லி, ஆக. 6-**

**“கடுமையான சட்டங்களால் மாணவர்களின் தற்கொலைகளைத் தடுக்க முடியாது. ‘நீட்’ தேர்வை முழுமையாக அகற்றுவதே ஒரே தீர்வு” என்று மாநிலங்களவையில் கல்வித்துறை மசோதா மீதான விவாதத்தில் உரையாற்றிய மாநிலங்களவைக் கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா குறிப்பிட்டார்.**

மாநிலங்களவையில் 30.07.2026 அன்று திருச்சி சிவா கல்வித் துறை மசோதா மீதான விவாதத்தில் ஆற்றிய உரை வருமாறு:

இன்றைய இந்த விவாதத்தில் பல ஆச்சரியங்கள் உள்ளன.

முதலாவது, புதிய கல்வி அமைச்சர் அனுபவம் வாய்ந்த அமைச்சராக இருந்தாலும், இந்தத் துறையில் புதிதாக இருக்கலாம். ஆனால், என்னுடைய நண்பர்களான இரு இணை அமைச்சர்கள் (Ministers of State) ஜெயந்த் சௌத்ரி மற்றும் மஜூம்தார் ஆகியோர் இந்த மசோதாவை அவையில் முன்வைக்கத் தகுதியற்றவர்களா?

அதற்கு பதிலாக, பிரதமர் அலுவலகத்தின் இணை அமைச்சர், விண்வெளித் துறை உள்ளிட்ட பல அமைச்சகங்களை கவனித்து வருபவர், இந்த கல்வித்துறை மசோதாவை பரிசீலனைக்கு முன்வைத்துள்ளார். இது உண்மையிலேயே ஆச்சரியமாக உள்ளது.

உங்கள் சொந்த இணை அமைச்சர்கள் மீதே உங்களுக்கு நம்பிக்கை இல்லையெனில், மக்கள் எப்படி அவர்கள்மீது நம்பிக்கை வைப்பார்கள்? இதற்கு அரசு பதிலளிக்க வேண்டும்.

கல்வித்துறைக்குரிய ஒரு மசோதாவை, கல்வித்துறையுடன் தொடர்பில்லாத மற்றொரு அமைச்சரை வைத்து ஏன் முன்வைக்கிறீர்கள்?

மேலும், அந்த அமைச்சர் இங்கேயும் இல்லை. அப்படியானால், நாங்கள் யாரிடம் பேச வேண்டும்? எனக்கு இது புரியவில்லை.

மேலும், எனது மதிப்பிற்குரிய சக உறுப்பினர் பிரிஜ் லால் அவர்கள் பேசும்போது, மாணவர் போராட்டங்களை ஒடுக்க துகள்துப்பாக்கி (Pellet Gun) பயன்படுத்தப்படவில்லை என்று கூறினார். ஆனால் அது உண்மையல்ல.

நேற்றுதான் உச்சநீதிமன்றம், துகள்துப்பாக்கியால் காயமடைந்த போராட்ட மாணவர்களுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்க மருத்துவமனை நிர்வாகத்திற்கு உத்தரவிட்டுள்ளது.

மாணவர் போராட்டக்காரர்களுக்கு இரண்டு மூத்த அமைச்சர்கள் வழங்கிய உறுதிமொழிகளும் நிறைவேற்றப்படவில்லை.

அவர்களுடைய முதல் கோரிக்கை, சம்பந்தப்பட்ட அமைச்சர் பதவி விலக வேண்டும் என்பதாகும். அது நடந்தது.

### மாணவர்கள் மீதான வழக்குகளை திரும்பப் பெறுவீர்!

இரண்டாவது கோரிக்கை, மாணவர்கள் மீது பதிவு செய்யப்பட்ட அனைத்து வழக்குகளையும் (FIR) திரும்பப் பெற வேண்டும் என்பதாகும். ஆனால் அது நடைபெறவில்லை.

மாறாக, இரண்டு நாட்களுக்கு முன்பு உச்சநீதிமன்றமே, மாணவர்களுக்கு எதிராக பதிவு செய்யப்பட்ட அனைத்து FIRகளிலும் காவல்துறை விசாரணையைத் தொடர வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது.

இதன் பொருள், அரசு தனது வாக்குறுதியை காப்பாற்றவில்லை.

இதனால், மாணவர் தலைவர்கள் மீண்டும் போராட்டத்தைத் தொடங்குவோம் என்று எச்சரித்துள்ளனர்.

சூத்திரர், பிராமணர் என்ற பாகுபாடு குறித்து ஆதார நூல்களைக் கேட்கிறீர்கள். துணைத் தலைவர் அவர்களே, அதற்குப் புத்தக ஆதாரம் தேவையில்லை.

அது சமூகத்தில் நடைமுறையில் இருந்தது; இன்னும் இருக்கிறது. அந்தப் பாகுபாட்டை நாங்களே அனுபவித்திருக்கிறோம்.

ஒரு காலத்தில் தமிழ்நாட்டில் ஒருவர் மருத்துவராக வேண்டுமென்றால் சமஸ்கிருதம் தெரிந்திருக்க வேண்டும் என்ற நிலை இருந்தது.

நீதிக்கட்சி (Justice Party) முன்னோடிகள் அந்த அநீதியை ஒழித்த பிறகே பட்டியலின மக்கள் (SC) மற்றும் பிற்படுத்தப்பட்டோர் (OBC) மருத்துவர்களாகும் வாய்ப்பு பெற்றனர்.

### பயனற்ற முயற்சி!

இப்போது இந்த மசோதாவைப் பற்றி பேசுகிறேன். இந்த மசோதா முற்றிலும் பயனற்ற முயற்சி. இதனால் எந்த எதிர்பார்க்கப்பட்ட பலனும் கிடைக்காது. இது மாணவர்கள் எழுப்பிய உண்மையான பிரச்சினையிலிருந்து மக்களின் கவனத்தைத் திருப்பும் முயற்சி மட்டுமே.

ஏன் இதை பயனற்றது என்று கூறுகிறேன்?

சட்டத்தை மேலும் கடுமையாக்குவதால் மட்டும் எந்தப் பிரச்சினையும் தீராது. வினாத்தாள் கசிவு மீண்டும் நிகழலாம். அப்போது மீண்டும் தேர்வு ரத்து செய்யப்படும். மீண்டும் தேர்வு நடத்தப்படும்.

### கல்வி அமைச்சர் பொறுப்பேற்க வேண்டும்!

ஆனால், அந்தத் தேர்வுக்காக இரவு பகலாக உழைத்து தயாரான மாணவர்கள் எவ்வளவு பெரிய மன அழுத்தத்திற்கும் வேதனைக்கும் ஆளாகிறார்கள் என்பதை யாராவது சிந்தித்துப் பார்த்தீர்களா?

சட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு விரைவு நீதிமன்றங்கள் (Fast Track Courts) அமைக்கலாம்.

குற்றவாளிகளைத் தண்டிக்கலாம். ஆனால், வினாத்தாள் கசிவில் யார் மீது சந்தேகம் எழுந்தாலும், அதற்குப் பொறுப்பேற்க வேண்டியது கல்வி அமைச்சரல்லவா? இரண்டு நாட்களுக்கு முன்வரை அந்தப் பொறுப்பில் இருந்த அமைச்சரும் பொறுப்பேற்க வேண்டியவர்தானே? இதற்கு இந்த அவைக்கு பதில் கிடைக்க வேண்டும்.

### 124 மாணவர்கள் பலி!

கல்வி உலகை மாற்றக்கூடிய மிக வலிமையான ஆயுதம்.

இதை நான் கூறவில்லை. நெல்சன் மண்டேலா கூறியுள்ளார்.

ஆனால், அந்தக் கல்வி நிர்வாகமே மாணவர்களின் மனதில் அச்சத்தையும் தாழ்வு மனப்பான்மையையும் உருவாக்கும் நிலைக்கு சென்றால், அதற்குப் பொறுப்பேற்க வேண்டியது யார்?

அரசின் பிடிவாதம் ஏற்கனவே 124 மாணவர்களின் உயிரைப் பறித்துள்ளது. இந்தியா பல்வேறு மொழி, பண்பாடு, சமூக, பொருளாதார, கல்வி வேறுபாடுகளைக் கொண்ட நாடு.

அப்படியிருக்க, “ஒரே தேர்வு - அனைவருக்கும் ஒரே முறை” என்ற கொள்கை இந்தியாவுக்கு எப்படி பொருந்தும்?

முன்பு மருத்துவக் கல்லூரி சேர்க்கை, பன்னிரண்டாம் வகுப்பு மதிப்பெண்களின் அடிப்படையில் நடைபெற்றது. ஏழை மாணவர்களும், கிராமப்புற மாணவர்களும் கடினமாக உழைத்து நல்ல மதிப்பெண்கள் பெற்றனர்.

ஆனால், NEET தேர்வு வந்த பிறகு, அவர்கள் பள்ளியில் படித்த பாடத்திட்டத்திலிருந்து முற்றிலும் மாறுபட்ட தேர்வு முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

மூன்று மணி நேரம் நடைபெறும் ஒரு தேர்வு, அவர்கள் பன்னிரண்டு ஆண்டுகள் உழைத்து பெற்ற மதிப்பெண்களை முழுமையாகப் புறக்கணிக்கிறது. இது எந்த வகையான நீதியாகும்?

### இதற்கு யார் பொறுப்பு?

இந்த முறையால்தான் தமிழ்நாட்டில் முதல் உயிரிழப்பு நிகழ்ந்தது.

அது அனிதா என்ற மாணவியின் உயிர். தமிழகம் முழுவதும் அந்தச் சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அவர் மிகவும் ஏழை குடும்பத்தைச் சேர்ந்தவர். சந்தையில் கூலித்தொழில் செய்த ஒருவரின் மகள். அரசுப் பள்ளியில் படித்தவர்.

பன்னிரண்டாம் வகுப்பில் 1176 மதிப்பெண்கள் பெற்றிருந்தார்.

ஆனால் NEET தேர்வில் வெற்றி பெற முடியாததால், அவர் தற்கொலை செய்து கொண்டார். அதன் பின்னர் இதுபோன்ற பல துயரச் சம்பவங்கள் தொடர்ச்சியாக நிகழ்ந்தன.

அனிதாவின் மரணத்திற்குப் பிறகும் இது போன்ற சம்பவங்கள் தொடர்ந்தன.

2026ஆம் ஆண்டு NEET வினாத்தாள் கசிவு தொடர்பான நிகழ்வுகளுக்குப் பிறகும் 24 மாணவர்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். நான் அரசிடம் கேட்கிறேன்:

இதற்கு யார் பொறுப்பு? இந்த உயிரிழப்புகளுக்குப் பதில் சொல்லப்போகிறவர் யார்? நாங்கள் மிகவும் மனவேதனையுடனும், காயமடைந்த உணர்வுடனும் பேசுகிறோம். இந்தப் பிரச்சினையை மிகவும் சாதாரணமாக எடுத்துக் கொள்ளாதீர்கள்.

இந்த மசோதா சட்டமாக மாறினாலும், வினாத்தாள் கசிவைத் தடுக்கலாம் என்று நீங்கள் கூறலாம். குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்கலாம் என்றும் கூறலாம்.

முன்னாள் கல்வி அமைச்சர்மீதும் நடவடிக்கை எடுக்கலாம் என்றும் வைத்துக் கொள்வோம். ஆனால் நான் ஒரு கேள்வி கேட்கிறேன்.



உயிரிழந்த 124 மாணவர்களை இந்தச் சட்டம் மீண்டும் உயிருடன் கொண்டு வர முடியுமா?

அவர்களுடைய பெற்றோரிடம் அவர்களின் பிள்ளைகளை மீண்டும் ஒப்படைக்க முடியுமா? அது முடியாது.

### ‘நீட்’ தேர்வை ரத்து செய்க!

ஆனால், ஒரு விஷயத்தில் எங்களுக்கு உறுதியான நிலைப்பாடு உள்ளது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் (திமுக) கொள்கை மிகவும் தெளிவானது. மேலும் புதிய கடுமையான சட்டங்கள் எங்களுக்குத் தேவையில்லை.

தண்டனைகளை அதிகரிப்பதும் தீர்வல்ல. NEET தேர்வை முழுமையாக ரத்து செய்ய வேண்டும். அதுவே எங்கள் அடிப்படை கொள்கை.

மாணவர்களின் சக்தியை ஒருபோதும் குறைத்து மதிப்பிடாதீர்கள். அவர்கள் அரசையே தனது முடிவை மாற்ற வைக்கும் வலிமை உடையவர்கள். அவர்களை துப்பாக்கியாலும், லாத்திச்சார்ஜ் மூலமும், கண்ணீர்ப்புகைக் குண்டுகளாலும் அடக்க முயல்வது சரியான அணுகுமுறை அல்ல. பிரதமர் சமூக வலைதளங்களில் வீடியோ வெளியிடுகிறார். ஆனால், இந்த அவைக்கு வந்து மாணவர்களின் பிரச்சினையைப் பற்றி பேசுவதில்லை.

உள்துறை அமைச்சரும் பல முக்கியமான நேரங்களில் அவையில் இல்லை.

இது நாடாளுமன்றத்தின் மீதான மரியாதையின்மையை வெளிப்படுத்துகிறது.

மாணவர்கள் தாக்கப்பட்டனர். காயமடைந்தனர். அச்சுறுத்தப்பட்டனர். பல்வேறு பெயர்களால் அவமதிக்கப்பட்டனர். இப்போது நிலைமை இந்த அளவிற்கு வந்துள்ளது. அமைச்சர் தனது பொறுப்பிலிருந்து விலகியிருக்கலாம்.

எதிர்காலத்தில் சட்டரீதியான பொறுப்பைத் தவிர்ப்பதற்காகவே அவர் பதவி விலகி யிருக்கலாம்.

இப்போது நீங்கள் கொண்டு வந்துள்ள இந்த மசோதாவால் எந்தப் பயனும் கிடைக்காது என்று நான் நம்புகிறேன்.

தேசிய தேர்வு முகமை (NTA)யில் பணிபுரியும் பலர் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டவர்கள். பல பணிகள் வெளிப்பணியாக (Outsourcing) வழங்கப்பட்டுள்ளன.

அதுமட்டுமல்ல, NTA இயக்குநர் பதவி 637 நாட்களாக காலியாக உள்ளது. இது எப்படி ஏற்றுக்கொள்ளக்கூடிய நிர்வாகம்?

### எந்த மாற்றமும் ஏற்படவில்லை!

தி.மு.க. ஆட்சியில் இருந்தபோது NEETஐ எதிர்த்து எங்களால் முடிந்த அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டோம்.

அரசு மூலமாகவும், சட்டமன்றத்தின் வாயிலாகவும், மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்தியும் தொடர்ந்து போராடினோம்.

2017ஆம் ஆண்டிலேயே,

எங்கள் தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்

பிரதமர், மத்திய சுகாதார அமைச்சர், மத்திய கல்வி அமைச்சர்

ஆகியோருக்கு கடிதங்கள் எழுதினார். அந்தக் கடிதங்களை நேரில் கொண்டு சென்றது நான்தான்.

அப்போது கல்வி அமைச்சராக இருந்த பிரகாஷ் ஜவடேகரைச் சந்தித்தேன்.

அவர் என்னிடம்,

“இந்தத் தேர்வை நடத்தும் நிர்வாகப் பொறுப்பு மட்டுமே என்னிடம் உள்ளது; மற்ற விஷயங்கள் எனக்குத் தெரியாது”என்று கூறினார்.

அப்போது சுகாதார அமைச்சராக இருந்த ஜே.பி. நட்டாவைச் சந்தித்தேன்.

அவர்,”இது உச்சநீதிமன்றத்தின் உத்தரவு. அதனால் இதை நடைமுறைப்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது”என்று கூறினார்.

பின்னர் பிரதமரையும் நேரில் சந்தித்து முழு விவரத்தையும் எடுத்துரைத்தேன். அவர் கவனமாகக் கேட்டார். ஆனால் எந்த மாற்றமும் ஏற்படவில்லை.

### உச்சநீதிமன்ற தீர்ப்பை மீறி சட்டங்கள்!

அப்போது அவர்கள்,

“உச்சநீதிமன்றத்தின் உத்தரவை மீற முடியாது”என்று கூறியதை நான் நம்பினேன்.

ஆனால் பின்னர் பல்வேறு சட்டங்களில்,

உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புகளை மீறி,

அரசு புதிய சட்டங்களை கொண்டு வந்தது.

உதாரணமாக,

•தீர்ப்பாய அமைப்பு (Tribunal Composition),

•டெல்லி தேசிய தலைநகர் நிர்வாகம் (NCT of Delhi),

•தேர்தல் ஆணையர் நியமனம்,

•மராத்தா இடஒதுக்கீடு

போன்ற பல விஷயங்களில் உச்சநீதிமன்றத் தீர்ப்புகளை மீறி சட்டங்கள் கொண்டு வரப்பட்டன.

அப்படியானால், NEET விவகாரத்தில் மட்டும்“உச்சநீதிமன்ற உத்தரவை மாற்ற முடியாது”என்று கூறுவது ஏன்?

நான் ஏற்கனவே கூறியதுபோல், இன்று ஒரு மாணவர் மருத்துவராக வேண்டுமென்றால் இரண்டு வழிகள்தான் இருக்கின்றன. ஒன்று, விலையுயர்ந்த NEET பயிற்சி மையங்களில் (Coaching Centres) சேர்ந்து பயிற்சி பெற வேண்டும். இல்லையெனில், தனியார் மருத்துவக் கல்லூரியில் சேரும் அளவிற்கு மிகப்பெரிய தொகையைச் செலுத்த வேண்டும்.

### ஏழை மாணவன் செலவு செய்ய முடியுமா?

முன்பு மருத்துவக் கல்லூரிகளில் கேபிடேஷன் கட்டணம் (Capitation Fee) இருந்தது. அதனை நீக்குவதாக நீங்கள் கூறினீர்கள். ஆனால் இன்று என்ன நிலை?

இப்போது ஒவ்வொரு ஆண்டும் ஒரு மாணவர் சுமார் ரூ.22 லட்சம் வரை கல்விக் கட்டணம் செலுத்த வேண்டியுள்ளது. அதோடு விடுதிக் கட்டணமும் சேர்கிறது. மருத்துவப் படிப்பை முழுமையாக முடிக்க சுமார் ரூ.1.5 கோடி வரை செலவாகிறது. இவ்வளவு பெரிய தொகையை ஒரு ஏழை மாணவர் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்?

இது எந்த வகையான சமத்துவமான கல்வி முறை?

இன்று தனியார் மருத்துவக் கல்லூரிகளும், NEET பயிற்சி மையங்களும் மிகப்பெரிய வணிகமாக வளர்ந்துள்ளன.

பயிற்சி மையங்களின் சந்தை மதிப்பு ரூ.65,000 கோடி முதல் ரூ.75,000 கோடி வரை உயர்ந்துள்ளதாக கூறப்படுகிறது.

ஒரு மாணவர் பயிற்சிக்காக ரூ .2 லட்சம், ரூ .3 லட்சம் வரை செலவிட வேண்டியுள்ளது. ஒரு கூலித் தொழிலாளியின் மகளோ, விவசாயியின் மகனோ, ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த மாணவரோ இவ்வளவு செலவு செய்ய முடியுமா?

அவர்களால் பயிற்சி மையங்களிலும் சேர முடியவில்லை; மருத்துவக் கல்வியிலும் நுழைய முடியவில்லை.

எனவே, NEET தேர்வை முழுமையாக ரத்து செய்ய வேண்டும்.

எங்களுக்கு இந்த மசோதாவும் வேண்டாம்; இந்தக் கடுமையான சட்டங்களும் வேண்டாம்.

இவை எதுவும் உண்மையான தீர்வை வழங்காது.

மாணவர்களை அணுகும் முறையிலும் அரசு மாற்றம் கொண்டு வர வேண்டும். மாணவர்களை வன்முறையால் அடக்குவது ஒரு அரசின் அணுகுமுறை அல்ல.

பிரிஜ் லால் அவர்கள், உள்துறை அமைச்சர் எல்லைப்பகுதிக்கு சென்று வீரர்களைச் சந்தித்தார் என்று கூறினார். அது அவருடைய கடமை.

ஆனால், ஜந்தர் மந்தரில் போராடிய மாணவர்களை அவர் சென்று சந்தித்தாரா? அவர்களின் துயரத்தை கேட்க முயன்றாரா?

### தமிழ்நாட்டில் மாணவர்கள் போராட்டம்!

1968ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் மாணவர் போராட்டம் நடைபெற்றபோது, அறிஞர் அண்ணா முதலமைச்சராக இருந்தார்.

அந்த நேரத்தில் காவல்துறை, நிலைமை மிகவும் மோசமாக உள்ளது; மாணவர்களை கட்டுப்படுத்த முடியவில்லை; துப்பாக்கிச் சூடு நடத்த அனுமதி வழங்க வேண்டும் என்று கேட்டது.

ஆனால், அறிஞர் அண்ணா வேறு பாதையைத் தேர்ந்தெடுத்தார்.

முதலில் கலைஞர் கருணாநிதியை மாணவர்களிடம் அனுப்பினார்.

பின்னர் தாமும் நேரில் சென்று மாணவர்களிடம் உரையாற்றி, அவர்களுடைய கோரிக்கைகளை கேட்டறிந்து உறுதியளித்தார்.

அதன் பின்னர், தமிழ்நாடு அரசு இருமொழிக் கொள்கை (தமிழ்-ஆங்கிலம்) தொடரும் என்று ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றியது.

அதுவே ஒரு பொறுப்பான அரசும் தலைவரும் செயல்படும் முறை.

ஆனால் இன்று என்ன நடக்கிறது?

முதலில் லத்திச்சார்ஜ்,

அதன்பின் கண்ணீர்ப்புகைக் குண்டுகள்,

பின்னர் பெலட் கன் (Pellet Gun).

### மாநிலப் பட்டியலுக்கு மாற்றப்பட வேண்டும்!

இதுவே அரசின் பதிலாக இருக்கிறது.

2017 முதல் இன்று வரை, திமுக தொடர்ந்து NEETக்கு எதிராக தனது குரலை எழுப்பி வருகிறது. நாங்கள் மத்திய சுகாதார அமைச்சரையும், கல்வி அமைச்சரையும், பிரதமரையும் நேரில் சந்தித்தோம். ஆட்சியில் இருந்தபோதும், எதிர்க்கட்சியாக இருந்தபோதும், NEETஐ எதிர்த்து தொடர்ந்து நடவடிக்கைகள் எடுத்தோம்.

தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தையும் ஆதரித்தோம்.

பின்னர் தி.மு.க. ஆட்சியிலும் மீண்டும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஆனால் ஆளுநர் அதற்கு ஒப்புதல் வழங்கவில்லை.

அது குடியரசுத் தலைவரிடம் அனுப்பப்பட்டது.

இன்றுவரை அதில் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

கல்வி தற்போது ஒருங்கிணைந்த பட்டியலில் (Concurrent List) உள்ளது.

அது மாநிலப் பட்டியலுக்கு (State List) மாற்றப்பட வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்துகிறோம். மருத்துவ சேவையும், மருத்துவக் கல்லூரிகளுக்கான உள்கட்டமைப்பையும் மாநில அரசுகளே உருவாக்குகின்றன. அனைத்து செலவுகளையும் மாநிலங்களே மேற்கொள்கின்றன.

ஆனால், மாணவர் சேர்க்கையை மட்டும் ஒன்றிய அரசு நடத்தும் ஒரு தேர்வு மூலம் தீர்மானிக்கிறது. இது ஏற்றுக்கொள்ள முடியாத நடைமுறை. நான் பேசுவது அரசியல் காரணங்களுக்காக அல்ல. இந்த நாட்டின் மாணவர்களின் உணர்வுகளுக்காகப் பேசுகிறேன். அவர்களின் எதிர்காலத்திற்காகப் பேசுகிறேன்.

### சட்டங்கள் இருந்தும் குற்றங்கள் தொடர்கின்றன!

அவர்களின் பெற்றோரின் கனவுகளுக்காகப் பேசுகிறேன். ஒரு குழந்தையிடம் பள்ளிப் பருவத்திலிருந்தே, “நீ என்ன ஆக விரும்புகிறாய்?”என்று கேட்டால், “நான் மருத்துவராக வேண்டும்”என்று கூறுகிறது.

ஆனால் இன்று அந்தக் கனவுகளுக்கான கதவுகளை NEET தேர்வும், வினாத்தாள் கசிவுகளும் மூடி விட்டன.

நாட்டில் ஏற்கனவே பல கடுமையான சட்டங்கள் உள்ளன. முன்பு இந்திய குற்றவியல் சட்டம் (IPC), குற்றவியல் நடைமுறைச் சட்டம் (CrPC) இருந்தன. இப்போது BNS மற்றும் BNSS போன்ற புதிய சட்டங்களும் வந்துள்ளன. சட்டங்கள் இருந்தும் குற்றங்கள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

அதேபோல், இன்று நீங்கள் கொண்டு வரவுள்ள இந்தச் சட்டமும், மாணவர்களின் தற்கொலைகளையும், தாழ்வு மனப்பான்மையையும், அவர்களின் வேதனைகளையும் தடுக்க முடியாது. எனவே, இந்த அவையின் மூலமாக அரசை மீண்டும் கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கடுமையான சட்டங்கள் எந்தப் பயனையும் தராது. NEET தேர்வை முழுமையாக ரத்து செய்யுங்கள். அதுவே இந்த நாட்டின் மாணவர்களுக்கு நல்ல எதிர்காலத்தை வழங்கும்.

இவ்வாறு திருச்சி சிவா எம்.பி. உரையாற்றினார்.